


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்



1879 -1916 ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 3. இதழ் – 2. மார்ச் – ஏப்ரல் 2017

**R5673**

## King Saul's Last Battle
## சவுல் ராஜாவின் கடைசி யுத்தம்

*1 சாமுயேல் 28*

*நிலைகுலைந்த சவுல் எந்தோரின் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயின் உதவியை நாடினான்–கெட்ட ஆவிகளால் வஞ்சிக்கப்பட்டான்–போரில் தோல்வி – சவுலும் யோனத்தானும் கொல்லப்பட்டார்கள்–வில்–ன் பாட்டு அல்லது சவு–ன் சவ ஊர்வலம் – தாவீது யூதாவின் ராஜா–பிறகு சமஸ்த இஸ்ரயேலுக்கும் ராஜா.*

*"கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்." சங்கீதம் 28:7*

இன்றைய பாடத்தை தேவனுக்கு பிரியமுள்ள தாவீதின் அனுபவங்களி–ருந்தும், இஸ்ரயேல் சரித்திரத்தின் முக்கிய காலப்பகுதியி–ருந்தும் பார்க்கப் போகிறோம். சவுல் ராஜாவால் பின் தொடரப்பட்டு துன்புறுத்தப்பட்ட தாவீதுக்கு பாதுகாப்பான இடமே இல்லை. பெ–ஸ்தியன் தாவீதை விரோதியாக அல்ல, நண்பனாக விரும்பி, அவனுக்கும் அவனது ஆட்களுக்கும் சிக்லாக் என்னும் பட்டணத்தை கொடுத்தான். தாவீது அங்கே தங்கியிருந்தபோது, அவனது வெற்றியெல்லாம் அமலேக்கியர் மேலேயே இருந்தது, இஸ்ரயேலருக்கு எதிராக அல்ல. அவனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக விருப்பத்துடன் போரிட முடியாது. எனினும் தேவன் அனுமதிக்கிற அளவுக்கு மேலாக அவர்கள் பாவங்கள் பூரணமடையும் போது அவர்கள் அழிக்கப்படவேண்டியவர்கள். தேவன் அறிவிக்கும்போது, அவர்களுக்கெதிராக சண்டையிடக் கூடியவனாக இருக்கிறதை அறிவான்.

இடையில் சவு–ன் ராஜ்யபாரம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. பெ–ஸ்தியர் புதிதாக இஸ்ரயே–ன் மேல் படையெடுத்திருந்தார்கள். சவுல் தனது முழு படைபலத்தையும் சேர்க்க வேண்டிய அவசியத்தில் இருந்தான். போரின் முடிவைக் குறித்து மிகவும் பயத்தில், சந்தேகத்தில் இருந்தான். தேவனுடைய கட்டளைக்கிணங்க, அவன் ஒரு ராஜா என்ற அதிகாரத்தில் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் மரித்தவர்களோடு பேசுகிற அனைவரையும் நாட்டை விட்டு விரட்டியிருந்தான். எனினும் இங்கொன்றும் அங்கொன்றுமாக சிலர் இஸ்ரயே–லே இருந்தார்கள். கர்த்தரிடத்தி–ருந்து அவன் எந்த பதிலையும் பெறாததால், முடிவில் எந்தோரி–ருந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயிடம் சென்றான். அவள் ராஜாவின் படைத்தலைவன் அப்நேரின் தாய் என்று அவனுக்கு சொல்லப்பட்டது.

அஞ்சனக்காரி தனக்கு ஆபத்து நேரிடாது என்பதை உறுதிசெய்து கொண்டு, ஆவி உலகில் தொடர்புடையவர்கள் இறந்தவர்களின் ஆவி என்று எண்ணிக் கொண்டிருக்கிற விழுந்துபோன தூதர்களிடத்தில் அவள் தொடர்பை பெற்றாள். சந்தேகத்திற்கிடமில்லாமல் அழைக்கப்பட்டவர் சாமுயேல் என்று அவள் நினைத்தாள், ஆனால் நமக்கு வேதாகமம் "மரித்தோர்கள் ஒன்றும் அறியார்கள்" என்று உறுதியாகக் கூறுகிறது. சாமுயேல் அவரது பிதாக்களோடே, உயிர்த்தெழுங்காலைக்காக காத்துக் கொண்டு நித்திரையி–ருந்தார், அவரால் எந்தவித ஆலோசனையும் கொடுக்க இயலாது. நடக்கிற காரியங்கள் எதையும் அவர் அறியமாட்டார்.

எனினும் தீய ஆவிகள், இந்த காலத்தைப் போல் அந்தக் காலத்திலும் தங்களது மேலான அறிவைக் கொண்டு இறந்தவர்களைப் போல மீடியம் (Medium) மூலமாக பதிலளித்தன. இந்த காரியத்தைக் குறித்த கேள்விகளுக்கு, அடுத்த நாள் போரில் சவுல் தோல்வியடைவான் என்றும் அவனும் அவனது குமாரர்களும் கொல்லப்படுவார்கள் என்றும் பதிலாக கிடைத்தது.

இந்த அளவுக்கு மனுக்குலத்தைப் பற்றிய காரியம் விழுந்துபோன தூதர்களுக்கு எப்படித் தெரியும் என்பதை நாம் அறியோம். ஆனால் அவைகளோடு தொடர்பு கொள்வது ஞானமற்ற செயல் என்பதை நாம் அறிவோம். அது கர்த்தரால் விலக்கப்பட்டிருக்கிறது. அவர்களது நோக்கமே மனிதர்களை வஞ்சிப்பதுதான்; பரிசுத்த பவுல் கூறுவது போல, அவர்கள் கனவுகள் மற்றும் வெளிப்படுத்தல் மூலமாக அநேக பலவிதமான பிசாசுகளின் போதனைகளை சபைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். (1தீமோ.4:1) இவைகள் நமது விசுவாச பிரமாணங்களில், செத்த ஈ தைலத்தை நாறிப் போகப் பண்ணுவது போல (பிரசங்கி 10:1) இணைக்கப்பட்டிருக்கிறது.

வேதாகமம் தெளிவாக என்ன போதிக்கிறது என்பதை ஜனங்கள உணர்ந்து கொண்டால் மிகவும் சந்தோஷமாக

இருக்கும். அதாவது மரித்தவர்கள் மரித்தோர்களே; எந்தவித செய்தியைப் பற்றியும் அறியார்கள்; அவர்களுக்கு சந்தோஷமுமில்லை, துக்கமுமில்லை; உயிரற்ற நிலையில் உயிர்த்தெழும் விடியற் காலைக்காக காத்திருக்கிறார்கள். அந்நாளில் இம்மானுயேலாகிய மேசியா, தேவனுடைய மகிமையின் அறிவை, தமது கல்வாரி மீட்கும் பொருள்-ப-யின் பலனால் எல்லாருக்கும் கொண்டு வருவார். உயிரோடு இருந்தது போலவே மரித்த பிறகும் இருக்கிறார்கள் என்கிற போதனை அறிவீனமானது மாத்திரமல்ல, தேவனுடைய வசனத்திற்கு மாறானதாகவும் இருக்கிறது. இவைகளெல்லாம் பலவித தப்பறையான போதகங்களுக்கு அடிப்படையாக ஆகியிருக்கிறது. இது கிறிஸ்தவ மக்களின் விவேகமான விவாதத்தை துக்கப்படுத்தியிருக்கிறது. உயிர்த்தெழும் காலை வரை தமது மரித்த நண்பர்கள் வெறும் நித்திரையி-ருக்கிறார்கள் என்பதை அறிந்திருந்தால், யாரும் மரித்தவர்களுக்காக ஜெபம் பண்ணவோ, உத்தரிக்கிற ஸ்தலத்தி-ருந்து அவர்களை விடுவிக்க திருப்ப- பூஜை செய்யும்படியோ கேட்கமாட்டார்கள்.

மரித்தவர்கள் உயிரோடிருக்கிறார்கள் என்ற இந்த போதனை மிக மோசமான தேவதூஷணத்திற்கு அடிப்படையாக ஆகியிருக்கிறது. இந்த போதனையில்தான் கிட்டத்தட்ட எல்லா சபை பிரிவினரும் தங்கள் விசுவாச அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல இணைந்திருக்கிறார்கள். இந்த தூஷணங்கள் தேவனுடைய குண லட்சணங்கள் மற்றும் திட்டங்களைப்பற்றிய அறிவிப்பில் அமைந்திருக்கிறது. இவைகள், நன்மையான எந்த ஈவையும், பூரணமான எந்த வரத்தையும் பரத்தி-ருந்து தருகிற சகல கிருபைகளும் பொருந்திய தேவனும், சகல இரக்கங்களுக்கும் பிதாவுமாயிருக்கிறவரின் குணநலன்களுக்கும் நற்பண்புகளுக்கும் வெகு தூரமாயிருக்கிறது. (யாக்கோ 1:17)

### வில்□ன் பாட்டு

போரின் முடிவை கேள்விப்பட்டபொழுது தாவீது, சவுல் மற்றும் யோனத்தான் மேல் இருந்த தனது அனுதாபத்தை ஒரு அழகான பாடலாக வெளிப்படுத்தினான். அதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தன்னை சவுல் துன்பப்படுத்தினதையும் தனது உயிரை வாங்க தேடினதையும் அதில் குறிப்பிடவில்லை என்பது தான். சவுல் செய்திருந்த நன்மையான காரியங்கள் மட்டுமே அதில் இடம் பெற்றிருந்தது. ஸ்திரீகளின் அன்னபக் காட்டிலும் மேலான யோனத்தானின் இளமையான அன்பு அதில் கூறப்பட்டிருந்தது. இந்த பாட்டு 2 சாமுயேல் 1:17-27ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. சவுலைப்பற்றியும் யோனத்தானின் வில்வித்தை பற்றியும் தாவீதின் பாட்டு பாடகர்களால் சவ ஊர்வலத்தில் பாடப்பட்ட முறையே தற்காலம் வரை நடந்து வருகிறது. இது அடக்க ஆராதனையாக தற்காலத்தில் குறிப்பிடப்படுகிறது.

போரில் சவு-ன் மகன்கள் அனைவரும் யோனத்தானும் கொல்லப்பட்டார்கள். சவுலும் காயமடைந்தான். பெ-ஸ்தியர்கள் தன்னை கொல்வதற்கு உயிருடன் சித்ரவதை செய்வார்கள் என்று பயந்து, அவன் தனது ஆயுததாரியை தன்னை கொன்று விடும்படி கூறினான். ஆனால் அவன் மறுக்கவே, சவுல் தனது ஆயுதத்திலே விழுந்து தற்கொலை செய்து கொண்டான்.

அமலேக்கிய வா-பன் ஒருவன், தாவீதுக்கு நல்லது செய்ததாக நினைத்துக் கொண்டு, சவு-ன் மூலமாக தாவீது அனுபவித்த துன்பத்தையெல்லாம் அறிந்திருந்து சவு-ன் மரண செய்தியைக் கூறி, அவனது தலையின் மேல் இருந்த முடியையும், கையில் இருந்த அஸ்தகடகத்தையும் கொடுத்தான். சவுல் மரணத்திற்கேதுவான காயப்பட்டிருந்த போது, தன்னை கொல்லும்படி சவுல் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவனை கொன்று போட்டதால் தனக்கு கௌவரம் கிடைக்கும் என்று நினைத்து இப்படி கற்பனை செய்து கூறினான். தாவீது தான் எதிர்பார்த்ததற்கு மாறாக செய்தியைப் பெற்றதால், தாவீது அவனை நோக்கி "கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொன்று போடும்படி நீ உன் கையை நீட்டப்பயப்படாமற் போனது என்ன என்று சொல்-" அவனைக் கொன்றுபோடும்படி கட்டளையிட்டான். சவுலுக்காகவும் யோனத்தானுக்காகவும் அன்று சாயங்கால மட்டும் துக்கம் அனுசரித்தார்கள்.

முடிவில் தாவீதுதான் இஸ்ரயே-ன் ராஜாவாக வேண்டும் என்ற முழு நம்பிக்கையோடு, அதிக அவசரப்படாமல், தேவன் கொடுக்கவிருந்த அந்த அதிகாரத்திற்காகவும். பொறுப்புக்காகவும் சாதாரணமாக அவன் அந்த அநேக ஆண்டுகள் காத்திருந்தான். தாவீதின் வாழ்க்கையில் நாம் எப்படிப்பட்ட ஒரு உதாரணத்தை நாம் பெற்றிருக்கிறோம்! தங்களது அனைத்து காரியங்களிலும் தேவனுடைய நேரத்திற்காக எவ்வளவு பொறுமையாக காத்திருக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளக்கூடும்- "உம்முடைய ராஜ்யம் வருவதாக"என்று ஜெபிக்கும்போது ராஜ்யத்திற்கு மாத்திரமல்ல, எல்லாவற்றையும் அவர்களது நன்மைக்கேதுவாக்கும் தேவனுடைய வழிநடத்துதலுக்காகவும், நன்மைக்காகவும் காத்திருக்கவேண்டும் என்பதையும் கற்றுக் கொள்ளக்கூடும்! அவர்களது காரியங்களில் தேவனுடைய நன்மைகளையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேற்பார்வையையும் கவனியாமல், தாங்களே காரியங்களை முயற்சிப்பது அவர்களுக்கே நஷ்டம் உண்டாகும்படி ஆகிறது. இது கிறிஸ்தவர்கள் அடிக்கடி செய்யும் தவறுகளில் ஒன்றாக இருக்கிறது.

தாவீது, தானும் தனது ஆட்களும் பெ-ஸ்தியர் நாட்டி-ருந்து புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து, ஆசாரியர்கள் மூலமும் ஏபோத் மூலமும் தேவனிடம் விசாரித்தான். அவன் யூதேயாவுக்கு போக வேண்டும் என்று பதில் கிடைத்தது. அடுத்து எந்த பட்டணத்துக்கு போக வேண்டும் என்று விசாரித்தான். எப்ரோன் என்று பதில் கிடைத்தது. தாவீதும் அவனது ஆட்களும் குடும்பத்தோடு அங்கே சென்றார்கள். அவனது சொந்த கோத்திரமாகிய யூதா

கோத்திரம் அவனை ராஜாவாக உடனே அங்கீகரித்தார்கள். எனினும் சமஸ்த இஸ்ரயேலுக்கும் ராஜாவாக ஆவதற்கு இதன்பிறகு ஏழு வருடங்கள் சென்றது. இந்த சமயத்தில் சவு-ன் படைத்தலைவனான அப்னேர், உயிரோடிருந்த சவு-ன் மகன்களில் ஒருவனான இஸ்போசேத்தை இஸ்ரயேல் அனைத்தின்மேலும் ராஜாவாக்கினான். யூதாவின் ராஜாவாகிய தாவீது, மற்ற கோத்திரத்தாரை தனக்கு கீழ்ப்படியும்படி பலவந்தப்படுத்தாமல், தேவனுடைய குறித்த காலத்திற்காக தொடர்ந்து காத்திருந்தான்.

எனினும் இந்த சமயத்தில் அப்னேர், தாவீதுக்கு விரோதமாக படைகளை திரட்டினான், அதனால் ஒரு பயங்கரமான போர் நடந்து, தாவீதுக்கு வெற்றி கிடைத்தது. மற்றவர்கள் தோல்வியை தழுவினர். கடைசியாக அப்னேர், இஸ்போசேத்திடம் கோபங்கொண்டு, தாவீதிடம், தான் அவனுக்கு கீழ்ப்பட்டு இருப்பேன் என்றும் இஸ்ரயேல் ஜனங்களை தாவீதுக்கு இசைவாக திருப்புவேன் என்றும் கூறினான். இது தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு இசைவாக இருக்கிறது என்று தாவீது உணர்ந்து ஏற்றுக்கொண்டான். ஆனால் இது தாவீதின் சகோதரியின் மகனும் படைத்தலைவனுமாகிய யோவாபுக்கு இன்னும் சொல்லப்படாததால், அவன் அப்னேரை வஞ்சகமாக கொன்றுபோட்டான். மறுபடியுமாக நாம் இங்கே தாவீதின் உயர்ந்த குணத்தை காண்கிறோம். அப்னேரின் சாவுக்காக தாவீது ராஜா சந்தோஷப்படாமல், துக்கம் அனுசரித்தான், தாவீது யோவாபின் செயலுக்காக அவனை பகிரங்கமாக கண்டனம் செய்தான். "இஸ்ரயே-லே பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான்" என்று அப்னேரின் நற்குணத்தைக் குறித்து புகழ்ந்து பேசினான். இப்படி தனது திறமையான வீரர்களிடம் பேசும்படியான தைரியத்தைப் பெற்றிருந்தான்.

## சமஸ்த இஸ்ரயே□ன் ராஜா

**இதற்கு சில காலத்திற்கு பிறகு, வேறு சிலர் தாவீதை தவறாக புரிந்து கொண்டு, இஸ்போசேத் ராஜாவை கொலை செய்தால், தாவீது தங்களுக்கு பரிசு வழங்குவான் என்று எதிர்பார்த்து, அவனது தலையை தாவீதிடம் கொண்டு வந்தார்கள். அவர்கள் ராஜாவை கொலை செய்திருந்தார்கள். அதே தண்டனைக்கு அவர்களும் தகுதியானவர்களாயிருந்தார்கள். அவர்களும் கொல்லப்பட்டார்கள். இப்படியாக அவனது காலத்தில் முற்றிலும் அசாதாரணமான நீதியின் கொள்கைகளை தாவீது விளக்கிக் காண்பிக்க மக்கள் கண்டார்கள். இந்த நீதியின் கொள்கை இன்னும் அரிதாயிருக்கிறது என்று நாம் கூறுவோம். இவைகளெல்லாம் தாவீது ராஜாவை மக்களின் அன்புக்குரியவனாக்கியது. ஜனங்கள் அவனை குறுகிய எண்ணமுடையவனாகவோ, சுயநலக்காரனாகவோ காணாமல், பெருந்தன்மை உடையவனாகவும், அவனது எதிராளிகளிடமும், சத்துருக்களிடமும் கூட பரந்த மனதுள்ளவனாகவும் கண்டார்கள். அவன் நீதியை அதிகமாக மதிப்பவனாகவும், அவனது எதிரிகளிடம் கூட மிகவும் இரக்கம் உள்ளவனாகவும் காணப்பட்டான்.**

**முடிவாக மற்ற பதினோரு தோத்திரத்தாரின் மூப்பர்களின் குழு தாவீதிடம் வந்து, முழு இஸ்ரயேலுக்கும் ராஜாவாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளும்போது, தாவீதுக்கு வயது முப்பத்தேழு. இது சவுல் இறந்ததி-ருந்து ஏழரை வருடத்திற்கு பின்பும், தேவன் சாமுயேலால் தாவீதை அபிஷேகம் பண்ணின பதினேழு வருடங்களுக்கு பின்பும் நடந்தது.** அந்த வருடங்களின் ஒவ்வொரு படியும் தாவீதின் விசுவாசம், பொறுமை ஆகியவைகளை காண்பிக்கக் கூடியதாக இருந்தது. இல்லையென்றால் நமக்கு தெரியாது. அதன் சிறப்பு அதிலே காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தேவனிடம் உள்ள பக்தியும், தெய்வீக சித்தத்துக்கு கீழ்ப்படிதலும் பிரதானமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது.

சமஸ்த இஸ்ரயேலுக்கும் ராஜாவாயிருக்க தாவீது சம்மதித்தபோது, அவன் மூன்றாவது முறையாக அபிஷேக தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்டான். அபிஷேக எண்ணெய் தலையில் ஊற்றப்பட்டது.

இந்த காலக்கட்டத்தில் தாவீது மென்மேலும் பலப்பட்டு வந்தான். அவனுடைய எதிரிகளை – தேவனுடைய எதிரிகளை தேவன் அழிக்கும்படி அறிவித்தவர்களை ஜெயித்துக் கொண்டு வந்தான். எமோரியரின் மீறுதல்கள் நிறைவடைந்தது, அவர்கள் பூமியி-ராதபடிக்கு அழிக்கப்பட வேண்டும் என்கிற தேவனுடைய சித்தம் குறிப்பிடப்பட்டதை இங்கு நாம் வாசகருக்கு மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம். அவர்கள் அழிக்கப்படுவது போரினாலா அல்லது, கொள்ளை நோயினாலா அல்லது பஞ்சத்தினாலா என்பது முக்கியமல்ல, தேவனுடைய தீர்ப்பு நிறைவேற்றப்படவேண்டும்.

எனினும் எல்லா காலங்களிலும் தேவன் வியாதியையும், யுத்தங்களையும், கொள்ளை நோய்களையும் உலகத்தில் அனுமதித்தாலும் பெரிய இரட்சகர் மூலம் மானிட இரட்சிப்புக்கு, மானிட மீட்புக்கு தேவன் தயார் செய்து கொண்டிருக்கிறார். மேசியாவின் ராஜ்யம் பூமியின் அதிகாரத்தை சீக்கிரத்தில் எடுத்து, பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை நீக்கி, சாத்தானைக் கட்டி, தெய்வீக சத்தியமாகிய சூரிய ஒளி பூமியை நிரப்பும்படிச் செய்யும். பிறகு உண்மையான தேவனையும், அவரது உண்மையான சத்தியத்தையும் அறிந்து,புரிந்துகொள்ள குருடரின் கண்கள் திறக்கப்படும், செவிடரின் காதுகள் கேட்கும்படி செய்யப்படும்.

இடையில் இஸ்ரயே-ன் பட்டயத்தால் மரித்தவர்கள் காலம் கடந்து சென்றதை அறியமாட்டார்கள். பூமியின் மண்ணிலே மரித்த அனைவரும் நித்திரையி-ருந்து எழுந்து வரும்போது, ஆயிர வருட அரசாட்சியில் அவர்களும் எழுந்து வருவார்கள். அவர்கள் பிறகு மிகவும் அனுகூலமான நிலைமைக்கு கீழாக இருப்பார்கள். ஏதேனில் இழந்து, கல்வாரியில் மீட்கப்பட்ட மானிட பூரணத்திற்கு அவர்களை கொண்டு வரவும், அவர்களது பலவீனங்கள் மற்றும் சீரழிவி-ருந்தும் வெளிக்கொணர உதவிட தயாராயிருக்கும் மேசியாவின் ராஜ்யத்துடன் சேர்ந்து அவர்களை அறியாமை மற்றும் மூட நம்பிக்கை என்னும் இரும்பு விலங்கி-ருந்து விடுவிக்க நாம் அவர்களுக்காக வேண்டுதல் செய்ய முடியும்.